# இரண்டாம் திருப்புதல் தேர்வு—2014—15

வகுப்பு : 12

## கணக்குப்பதிவியல்

தேர்வு எண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

நேரம் : 3.00 மணி. மதிப்பெண்கள் : 200

எல்லா வினாக்களுக்கும் விடையளி :

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 30 X 1 = 30

1. அடக்கவிலை அல்லது ——— விலை, இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.
2. பற்பல கடனாளிகளிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன்—— எனப்படும்.
3. 1-1-2010 இருப்பாய்வின் முதலீடுகள் ரூ.5,00,000 வட்டிவீதம் ஆண்டிற்கு 10% வட்டி பெற்றது ரூ.37,500 எனில் 31-12-2010 அன்று கூடியுள்ள வட்டி ———
4. ——— முறையில் ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.
5. இறுதி முதலை அறிவதற்கு, ஆண்டு ——— நிலை அறிக்கை தயாரிக்கப்படவேண்டும்.
6. நீண்ட காலத்திற்கு பயனளிக்கக் கூடிய எல்லா சொத்துகளும் ——— சொத்துக்கள் எனப்படும்.
7. ஒவ்வொரு ஆண்டும், சொத்தின் ஏட்டு மதிப்பின் மீது தேய்மானம் கணக்கிடும் முறை ——— முறை என அழைக்கப்படும்.
8. நீர்மைப் பொறுப்புகள் என்பது நடப்பு பொறுப்புகளில் இருந்து ——— யை கழித்த தொகையாகும்.
9. விற்பனை ரூ.3,00,000 விற்ற பொருளின் அடக்கவிலை ரூ.2,40,000 எனில் மொத்த இலாப விகிதம் ——— ஆகும்.
10. ரொக்க திட்டப்பட்டியல் தயாரிக்க ——— முறைகள் உள்ளன.
11. சேர்ப்பின் போது, தொழிலின் மறுமதிப்பீட்டு இலாபம் ——— கூட்டாளிகளால் பகிரப்படும்.
12. இந்திய கூட்டாண்மை சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு ———
13. ஒரு பொறுப்பு மதிப்பு குறைக்கப்படும்போது அது ——— இனமாகும்.
14. பத்திர முனைமம் இருப்புநிலைக் குறிப்பில் ——— பக்கத்தில் காண்பிக்கப்படும்.
15. பெயரளவு முதல் நிறுமத்தின் ——— குறிப்பிடப்பட்டு இருக்கும்.

**II. சரியான விடையை தேர்வு செய்க :**

16. 31-03-2004 அன்றைய இருப்பாய்வின்படி கட்டிடத்தின் மதிப்பு ரூ.8,00,000. கட்டிடத்தின் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். எனில் கட்டிடத்தின் மதிப்பு இருப்புநிலைக்குறிப்பில் தோன்றுவது ———
    a) ரூ.8,00,000 b) ரூ.80,000 c) ரூ.7,20,000
17. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு ———
    a) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு b) மொத்த கடனாளிகள் கணக்கு
    c) மொத்த கடனீந்தோர் கணக்கு
18. எடுப்பின் மீது வட்டி ——— கணக்கிலிருந்து கழித்து காட்டப்படும்
    a) எடுப்பு க/கு b) முதல் க/கு c) வருமான க/கு
19. 1-4-2008 அன்று பற்பல கடனீந்தோர் ரூ.33000 31-03-2009 அன்று கடனீந்தோர் ரூ.42,000 ரொக்கம் செலுத்தியது ரூ.78000 எனில் நடப்பு ஆண்டு கடன் கொள்முதல் ———
    a) ரூ.87,000 b) ரூ.77,000 c) ரூ.69,000
20. நிலைச்சொத்துகள் விற்பதால் ஏற்படும் நட்டம் வரவு வைக்கப்படும் கணக்கு ———
    a) தேய்மானக் க/கு b) நிலைச்சொத்து க/கு c) இலாபநட்டக் க/கு
21. ஒரு நிலைச்சொத்தின் அடக்கவிலை ரூ.1,00,000 குறைந்து செல் முறையில் ஒவ்வோராண்டும் போக்கெழுதப்படும் ஆண்டுத் தேய்மானம் 10% எனில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு போக்கெழுதப்படும் மொத்த தேய்மானத் தொகை
    a) ரூ.21,070 b) ரூ.27,100 c) ரூ.27,010
22. நீர்மைத்தன்மை விகிதங்களும் ——— ஆல் கொடுக்கப்படும்.
    a) விகிதாச்சாரம் b) மடங்கு c) சதவீதம்
23. பின்வருவனவற்றில் எது சரியானது?
    a) புலனாகும் சொத்துக்கள் = நிலம் + கட்டடம் + அறைகலன்
    b) புலனாகும் சொத்துக்கள் = நிலம் + கட்டடம் + நற்பெயர்
    c) புலனாகும் சொத்துக்கள் = நிலம் + கட்டடம் + அறைகலன் + நற்பெயர் + பதிப்புரிமை
24. ஜனவரியில் தொடக்க ரொக்க இருப்பு ரூ.9,000 எதிர்பார்க்கும் பெறுதல்கள் ரூ.14,000 மற்றும் செலுத்தல்கள் ரூ.10,000 பிப்ரவரி மாதத்தின் தொடக்க இருப்பு ———
    a) ரூ.15,000 b) ரூ.5000 c) ரூ.13000
25. A, B கூட்டாளிகள் 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். புதிய கூட்டாளி C 1/5 பங்கிற்கு சேர்க்கப்பட்டார். A, B ஆகியோர் C யின் பங்கிற்கு தருவது ——
    a) சமமாக b) அவர்களின் முதல் விகிதத்தில்
    c) அவர்களின் இலாபப் பகிர்வு விகிதத்தில்
26. விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு நிறுவனத்தில் ஒரு ———
    a) சொத்து b) பொறுப்பு c) இவை ஏதுமில்லை
27. கூட்டாண்மையில் ஒப்பந்தம்
    a) கட்டாயமானது b) கட்டாயமில்லை c) தேவையில்லாதது
28. ஒரு நிறுமம் ரூபாய் நூறு முகமதிப்புடைய 30,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 25,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டு அந்நிறுமத்தின் ஒப்பிய முதல்
    a) ரூ.30,00,000 b) ரூ.25,00,000 c) ரூ.25,000
29. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீட்டு விலை முகமதிப்பைவிட ——— இருக்க வேண்டும்.
    a) குறைவாக b) அதிகமாக c) சமமாக
30. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூபாய் பத்து மதிப்புடைய 100 சாதாரண பங்குகள் மீதான இறுதி அழைப்புத் தொகை ரூ.2 செலுத்தப்படாமைக்காக ஒறுப்பிழப்பு செய்து அவற்றை ரூ.700க்கு மறு வெளியீடு செய்தனர் எனில் முதலினக் காப்பிற்கு மாற்றப்படும் தொகை.
    a) ரூ.500 b) ரூ.200 c) ரூ.300

## பகுதி - ஆ

குறிப்பு : அ. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி
ஆ. கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி : 10 X 5 = 50

31. கூடியுள்ள வருமானங்கள் என்றால் என்ன?
32. மாற்றுதல் முறை என்றால் என்ன?
33. ஆண்டுத்தொகை முறை தேய்மானம் என்றால் என்ன?
34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவம் யாது?
35. ரொக்கப் பெறுதல்களுக்கு உதாரணம் தருக.
36. ஆதாய விகிதம் என்றால் என்ன?
37. விகிதளவு ஒதுக்கீடு என்பதன் பொருளை விளக்குக.
38. 31.03.2004 அன்றைய இருப்பாய்வு கீழ்க்கண்ட விவரங்களைத் தருகிறது.

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| வங்கிக்கடன் 10% (1-4-03) | - | 10,00,000 |
| வட்டி கொடுத்தது | 50,000 | - |

கொடுபட வேண்டிய வட்டிக்கு வகை செய்க. சரிக்கட்டுப்பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டிடுக.

39. விடுபட்ட தகவலைக் காண்க :
துவக்க முதல் ரூ.48,000 ; இறுதி முதல் ரூ.78,000 ; நடப்பு ஆண்டு இலாபம் ரூ.18.000 ; கூடுதல் முதல் ரூ.24,000.
40. ஒரு நிறுமம் ரூ.1,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதன் நிறுவுகைச் செலவுகள் ரூ.10,000. பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். அதன் எறிமதிப்பு 5,000. நேர்கோட்டு முறையில் தேய்மானம் விகிதம் காண்க.
41. நிலைச்சொத்து - விற்பனை விகிதம் காண்க.
நிலைச்சொத்துக்கள் ரூ.6,00,000 ; தேய்மானம் ரூ.2,00,000 விற்பனை ரூ.17,00,000 ; உள்திருப்பம் ரூ.1,00,000.
42. கீழ்க்காணும் விவரங்களில் இருந்து ஜனவரி 2005 மாததற்கான ரொக்க திட்டபட்டியலை தயாரிக்க.
அ) கையிருப்பு ரொக்கம் (முன்கணிக்கப்பட்டது) ரூ.500
ஆ) ஜனவரி 2005-ல் ரொக்க விற்பனை ரூ.13000.
இ) ஜனவரி மாத கூலி ரூ.4750
ஈ) ரொக்க கொள்முதல் ரூ.5490
உ) முதலீடுகள் மீது பெறவேண்டிய வட்டி ரூ.350.
43. ராணி,வாணி எனும் கூட்டாளிகள் 5 : 4 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். மணி என்பவரை 1/3 கூட்டுக்கு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். புதிய இலாப விகிதத்தையும், தியாக விகிதத்தையும் காண்க.
44. குட்வில் நிறுமம் 80,000 ஐம்பது ரூபாய் முன்னுரிமை பங்குகள் 20% முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப்பதிவு தருக.

## பகுதி - இ

குறிப்பு : அ. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி இவற்றுல் வினா எண் 45வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்
ஆ. கோட்பாடு சார்ந்த வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி : 5 X 12 = 60

45. அ. 31-3-2004 அன்றைய இருப்பாய்வுன்படி பற்பல கடனாளிகள் ரூ.50,000 ; வராக்கடன் ரூ.2,000 சரிக்கட்டுதல்கள் :-
அ. மேலும் வராக்கடன் ரூ.2000 போக்கெழுதுக.
ஆ. பற்பல கடனாளிகள் மீது 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
இ. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக குறிப்பேட்டுப்பதிவுகள் தந்து, இவ்விரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

(அல்லது)

ஆ. திரு டேவிட் ஒற்றைப்பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார்.

| விவரங்கள் | 31-03-2002 ரூ. | 31-03-2003 ரூ |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 22,500 | 45,000 |
| அறைகலன் | 22,500 | 22,500 |
| பற்பல கடனாளிகள் | 1,12,500 | 1,50,000 |
| சரக்கிருப்பு | 52,500 | 75,500 |
| ரொக்க இருப்பு | 7,500 | 90,000 |

அவர் அவ்வாண்டில் ரூ.22,500 கூடுதல் முதல் இட்டார். தன் சொந்த செலவிற்காக ரூ.52,500 திரும்ப எடுத்துக் கொண்டார். 2002-03 ஆம் ஆண்டில் அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.
47. நற்பெயர் என்றால் என்ன? அதனை பாதிக்கும் காரணிகளை விளக்குக.
48. ரொக்க திட்டப் பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விரிவாக விளக்குக.
49. ராபர்ட் அண்ட் கோ 1.4.2002 அன்று ரூ.8,00,000 மதிப்புள்ள ஒரு நிலைச்சொத்தை வாங்கியது. ஆண்டுதோறும் தேய்மானம் 15% நேர்கோட்டு முறையில் நீக்கப்பட்டது. கணக்கேடுகள் ஆண்டு தோறும் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன.
குறிப்பேட்டுப் பதிவுகள் தருக, மேலும் நிலைச்சொத்துக் கணக்கையும், தேய்மானக் கணக்கையும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு தருக.

50. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இயக்க விகிதம், இயக்க இலாப விகிதம், நிகர இலாப விகிதம் காண்க. விற்பனை ரூ.1,00,000; மேலாண்மை செலவுகள் ரூ.1000 மொத்த இலாபம் ரூ.30,000; விற்பனை செலவுகள் ரூ.2000 பங்காதாயம் பெற்றது ரூ.400; நிகர இலாபம் ரூ.26,600 முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட நட்டம் ரூ.800

51. A, B என்றும் கூட்டாளிகள் 6 : 4 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். 1-4-2003 அன்று அவர்களது முதல் முறையே ரூ.2,40,000 மற்றும் ரூ.1,60,000 எனக்காட்டியது. கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களை செய்வதற்கு முன்னர் 31.03.2004 அன்று அந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.80,000 எனக் காட்டியது. அவர்களுடைய எடுப்புகள் A ரூ.18,000 ; B ரூ.12,000 கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காணுபவற்றிற்கு வகை செய்திருந்தது.

அ. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5%
ஆ. எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 6%
இ. A,B இருவரின் ஊதியம் முறையே ரூ.12,000
ஈ. Aக்குரிய கழிவு அக்கழிவை கழிப்பதற்கு முன்னரே உள்ள நிகர இலாபத்தில் 10%

திருத்தி அமைக்கப்பட்ட கூட்டாளிகளின் இலாப நட்டக் கணக்கையும், முதல் கணக்குகளையும் காட்டிடுக.

52. ஷீலா வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூபாய் நூறு முகமதிப்புடைய 2000 பங்குகளை இறுதி அழைப்பு ரூபாய் 25 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 1800 பங்குகளை பங்கொன்று ரூபாய் 60 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்தது.

ஒறுப்பிழப்பு, மறுவெளியீடு குறித்த பதிவுகள் தந்து பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கையும் தயாரிக்க.

## பகுதி - ஈ

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் இவற்றின் 53வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** **3 X 20 = 60**

53. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2009 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

| விவரங்கள் | 1.4.2008 ரூ. | 31-3-.2009 ரூ. |
|---|---|---|
| இயந்திரம் | 20,000 | 20,000 |
| சரக்கிருப்பு | 50,000 | 25,500 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

**மற்ற விவரங்கள் :**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| எடுப்பு | 20,000 | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 |
| பெற்ற தள்ளுபடி | 7,500 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 | விற்பனை திருப்பம் | 7,500 |
| பல்வகைச் செலவுகள் | 17,500 | கொள்முதல் திருப்பம் | 2,500 |
| ரொக்க விற்பனை | 2,500 | | |

இயந்திரத்தின் மீது 10% தேய்மானம் நீக்க வேண்டும்.

(அல்லது)

ஆ. A,B,C என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து தொழில்புரிந்து வந்தனர். 2005 மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின் வருமாறு.

இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 30,000 | வங்கி | 65,000 |
| பொதுக்காப்பு | 15,000 | கடனாளிகள் | 40,000 |
| A 2,00,000 | | சரக்கிருப்பு | 80,000 |
| B 1,20,000 | 4,20,000 | கட்டிடம் | 2,50,000 |
| C 1,00,000 | | இலாபநட்டக் க/கு | 30,000 |
| | 4,65,000 | | 4,65,000 |

பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு C, 2005 ஏப்ரல் 1 அன்று விலகினார்.

அ. கட்டடம் ரூ.30,000 மதிப்பேற்றம் செய்வது.
ஆ. கடனாளிகள் மீது 6% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குவது.
இ. நற்பெயர் ரூ.30,000 என மதிப்பிடுவது.
ஈ. C க்கு சேரவேண்டிய தொகையில் ரூ.50,000 உடனடியாகவும், மீதித்தொகை அவரின் கடன் கணக்குக்கும் மாற்றப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், வங்கிக் கணக்கு மற்றும் C விலகலுக்குப்பின் புதிய இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றையும் தயாரிக்க.

54. திருமதி சாந்தியின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட 2010 மார்ச் 31ஆம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| எடுப்பு | 40,000 | முதல் | 2,00.000 |
| வங்கி ரொக்கம் | 17,000 | விற்பனை | 1,60.000 |
| கை ரொக்கம் | 60,000 | பற்பல கடனீந்தோர் | 45,000 |
| கூலி | 10,000 | | |
| கொள்முதல் | 20,000 | | |
| சரக்கிருப்பு 31-03-2010 | 60,000 | | |
| கட்டடம் | 1,00,000 | | |
| பற்பல கடனாளிகள் | 44,000 | | |
| பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 29,000 | | |
| வாடகை | 4,500 | | |
| கழிவு | 2,500 | | |
| பொதுச்செலவுகள் | 8,000 | | |
| அறைகலன் | 5,000 | | |
| அநாமத்து கணக்கு | 5,000 | | |
| | 4,05,000 | | 4,05,000 |

**சரிக்கட்டுதல்கள் :**

1. 31-03-2010 அன்று இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.60,000
2. முதல் மீது 6% மும், எடுப்பின் மீது 5% வட்டி அனுமதிக்கப்பட வேண்டும்.
3. கட்டடம் மீது 15% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.
4. வராக்கடன் ரூ.4000 போக்கெழுதுக.
5. கொடுபட வேண்டிய கூலி ரூ.1000.

2010 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாபநட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து, நடப்பு விகிதம், நீர்மை விகிதம், துல்லிய நீர்மை விகிதம், கடனாளிகள் விற்பனை விகிதம்,மற்றும் கடனீந்தோர் கொள்முதல் விகிதத்தை காண்க.

இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| நேர்மைப் பங்குமுதல் | 55,000 | நிலம் மற்றம் கட்டடம் | 20,000 |
| முன்னுரிமைப்பங்கு முதல் | 15,000 | இயந்திரம் | 22,000 |
| பொதுக்காப்பு | 25,000 | அறைகலன் | 3,000 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 35,000 | சரக்கிருப்பு | 47,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 3,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 10,000 |
| வங்கிமேல் வரைப்பற்று | 3,000 | கடனாளிகள் | 23,000 |
| கடனீந்தோர் | 8,000 | குறுகிய கால முதலீடுகள் | 5,000 |
| செலுத்த வேண்டிய செலவுகள் | 6,000 | முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 1,000 |
| | | ரொக்கம் | 19,000 |
| | 1,50,000 | | 1,50,000 |

**கூடுதல் தகவல்கள் :-**

கடன் விற்பனை ரூ.1,65,000 ; கடன் கொள்முதல் ரூ.44,000

56. பின்வரும் விவரங்களிலிருந்து மார்ச், ஏப்ரல், மே 2010 மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| மாதம் | கடன் விற்பனை ரூ. | கடன் கொள்முதல் ரூ. | கூலி ரூ. | அலுவலகச் செலவுகள் ரூ. | பல்வகைச் செலவுகள் ரூ. |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 60,000 | 36,000 | 9,000 | 2,000 | 4,000 |
| பிப்ரவரி | 82,000 | 38,000 | 8,000 | 1,500 | 3,000 |
| மார்ச் | 84,000 | 33,000 | 10,000 | 2,500 | 4,500 |
| ஏப்ரல் | 78,000 | 35,000 | 8,500 | 2,000 | 3,500 |
| மே | 56,000 | 39,000 | 9,500 | 1,000 | 4,000 |

1. தொடக்க ரொக்க இருப்பு ரூ.8000.
2. வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடனின் காலம் ஒரு மாதம், ஆனால் சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்.
3. கூலி மற்றும் பல்வகைச் செலவுகள் அதே மாதத்திலும் அலுவலகச் செலவுகள் ஒரு மாத கால இடைவெளியிலும் செலுத்தப்படுகின்றன.

57. நிலவு வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.10 முகமதிப்புடைய 20000 பங்குகளை வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும். (பங்கு ஒன்றுக்கு முனைமம் ரூ.2.50)

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ.2.50 |
| ஒதுக்கீட்டின்போது (முனைமத்துடன்) | ரூ.5.00 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ.3.00 |
| இறுதி அழைப்பின்போது | ரூ.2.00 |

30000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பத்தொகை ஒதுக்கீட்டுக்கு சரி செய்து கொள்ளப்பட்டது. இதர தொகைகள் அனைத்தும் குறிப்பிட்ட நேரத்தில் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து வருவிக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பினை தயாரிக்க.